**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், புதுக்கோட்டை**

**முன்னிலை . திரு.K.S.பால்பாண்டியன், B.A., B.L.,**
**தலைமை குற்றவியல் நீதிபதி, புதுக்கோட்டை**

**2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 07ம் நாள் சனிக்கிழமை**

**<u>அமர்வு வழக்கு எண். 181/2022</u>**

(முதல் நிலை பதிவு வழக்கு எண்.11/2022)
(நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம், புதுக்கோட்டை)

| **வ.எண்.** | **தலைப்புகள்** | **விவரங்கள்** |
|---|---|---|
| 1. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | திருக்கோகர்ணம் காவல் நிலையம், குற்ற எண்.648/2021 |
| 2. | எதிரிகளின் பெயர் & முகவரி | **1. விஜய்,**<br>த/பெ.சிவக்குமார்,<br>அண்ணா நகர், புதுத்தெரு,<br>திருக்கோகர்ணம் அஞ்சல்,<br>புதுக்கோட்டை.<br><br>**2.மணிகண்டன் (எ) சின்னமணி,**<br>த/பெ.முத்துபரமன்,<br>நேருவீதி, கம்மாளர்தெரு,<br>திருக்கோகர்ணம்,<br>புதுக்கோட்டை.<br><br>**3. கருப்பசாமி, (இறந்துவிட்டார்)**<br>த/பெ.சண்முகசுந்தரம்,<br>கம்மாளர்தெரு, திருக்கோகர்ணம்,<br>புதுக்கோட்டை. |

| | | |
|---|---|---|
| 3. | சம்பவ தேதி | 15.08.2021 |
| 4. | புகார் அளித்த தேதி | 16.08.2021 |
| 5. | கைது செய்யப்பட்ட தேதி | 1ம் எதிரி– 16.08.2021<br>2ம் எதிரி– 02.09.2021 |
| 6. | பிணையில் விடுவிக்கப்பட்ட தேதி | 1ம் எதிரி– 08.12.2021<br>2ம் எதிரி– 03.02.2022 |
| 8. | எதிரிகளிடம் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வினவப்பட்ட நாள். | 28.03.2025 |
| 9. | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 03.03.2026 |
| 10. | விசாரணை துவங்கிய நாள் | 10.06.2025 |
| 11. | விசாரணை முடிவுற்ற நாள் | 03.03.2026 |
| 12. | தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட நாள் | 07.03.2026 |

| **வ.எண்.** | **தலைப்புகள்** | **விவரங்கள்** |
|---|---|---|
| 1. | குற்றமுறையீட்டாளரின் பெயர்: | காவல் ஆய்வாளர்,<br>திருக்கோகர்ணம் காவல் நிலையம்.<br>புதுக்கோட்டை. |
| 2. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்: | 1. விஜய்,<br>2.மணிகண்டன் (எ) சின்னமணி,<br>3. கருப்பசாமி, **(இறந்துவிட்டார்)** |
| 3. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள்: | 1,2 எதிரிகளின் மீது இ.த.ச பிரிவு 436ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 4. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் பதில் : | குற்றவாளிகள் அல்ல. |
| 5. | இந்நீதிமன்றத்தின் தீர்மானம்: | முடிவாக, இந்த வழக்கின் எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 436ன்கீழான குற்றச்சாட்டை பொறுத்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகிய சான்றுபொருட்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழித்துவிட உத்தரவிடப்படுகிறது. |
| 6. | தண்டனை அல்லது உத்தரவு | இல்லை. |

இவ்வழக்கானது புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு 13.12.2022 தேதியில் மாறுதல் செய்யப்பட்டு 03.03.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் அரசு தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.B.சிவசங்கரன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சிவன் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ஆனந்த் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும் இன்று வரை என் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆழ்ந்து வழங்கும்...

## தீர்ப்புரை

இவ்வழக்கின் 3ம் எதிரி இறந்துபோய்விட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது. இந்நிலையில் 1,2 எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 436ன் கீழ் குற்றம்சாட்டி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

15.08.2021 தேதியில் இந்த வழக்கின் புகார்தாரரும், அவரது குடும்பத்தாரும் அதிகாலை சுமார் 02.40 மணியளவில் வீட்டில் தூங்கி கொண்டிருந்தபோது அவர்களது வீட்டின் முன்பகுதியில் டமார் என்று பாட்டில் உடையும் சத்தம் கேட்டதாகவும், வெளியே வந்து பார்த்தபோது ஸ்பௌண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் அங்கிருந்து வேகமாக சென்றதாகவும், அந்த சமயம் புகார்தாரரின் வீட்டின் முன்புற கதவில் இருந்த ஸ்கிரீன் துணி தீப்பிடித்து எரிந்ததாகவும், அந்த இடத்தில் பாட்டில் சிதறிக்கிடந்ததாகவும், அந்த பாட்டிலில் துணியை கிழித்து திரியாக்கி அதில் பெட்ரோலை நிரப்பி புகார்தாரரின் வீட்டில் எறிந்து தீ வைக்க முயன்றுள்ளதால் 1,2 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவு 436ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

3) புதுக்கோட்டை, நீதித்துறை நடுவர் எண்.2 அவர்கள் இவ்வழக்கின் கோப்புகளை ஆராய்ந்து முதல்நிலை பதிவு வழக்கு எண் 11/2022 என கோப்பிற்கு எடுத்து எதிரிகளை ஆஜராக உத்தரவிட்டு, எதிரிகள் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு வழக்கு நகல்களை வழங்கி, முதல் நிலை விசாரணை மேற்கொண்டு கு.வி.மு.ச.பிரிவு 209-ன் கீழ் மாண்பமை புதுக்கோட்டை முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிட்டுள்ளார். மாண்பமை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் இவ்வழக்கினை கோப்புக்கு எடுத்து

இந்நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு அனுப்பியுள்ளது.

**4)** எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால், எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 436ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டினை மறுத்தார்கள். எதிரிகள் குற்றச்சாட்டினை மறுத்த காரணத்தால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

**5)** இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகளும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1 மற்றும் சா.பொ.2 வரையிலான சான்றுபொருள்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6)** <u>**அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**</u>

**6.1)** அ.சா.2.திருமதி.மலர்கொடி, தனது சாட்சியத்தில், தான் புதுக்கோட்டை மாவட்டம் திருக்கோகர்ணம் கம்மாளர் தெருவில் குடியிருந்து வருவதாகவும், அ.சா.1 முத்துக்குமார் தனது கணவரின் சகோதரர் என்றும், கடந்த 15.08.2021 தேதியில் நடுஇரவு சுமார் 2.45 மணியளவில் தான் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்ததாகவும், தன்னுடன் தனது மாமியார் ஆயிபொண்ணு, தனது கணவரின் பெரிய அண்ணன் வீரமுத்து, தனது கணவர் கார்த்தி,ஆகியோர் தூங்கிக் கொண்டிருந்தோம் என்றும், தங்கள் வீட்டிற்கு வெளியே வெடி

வெடித்ததுபோல் சத்தம்கேட்டது என்றும், தாங்கள் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தோம் என்றும், வீட்டின் முகப்பு கதவில் போட்டிருந்த ஸ்கிரின் துணி எரிந்த கொண்டிருந்தது என்றும், ஆட்டுக்குட்டி ஒன்று தீயில் கருகிவிட்டது என்றும், பாட்டிலில் பெட்ரோலை நிரப்பி அதை பற்ற வைத்து பெட்ரோல் குண்டை எரிந்துள்ளார்கள் என்றும், அது கதவில் பட்டு ஸ்கிரின் துணி மற்றும் ஆடு எரிந்ததாகவும், தாங்கள் வெளியில் வந்து பார்த்தபோது வேறு நபர்கள் யாரும்அங்கு இல்லை என்றும், பாட்டில் துகள்கள் தங்கள் வீட்டு வாசலில் கிடந்தது என்றும், போலிசில் தனது கணவரின் சகோதரர் முத்துக்குமார் புகார் கொடுத்தார் என்றும், போலிசார் தன்னை விசாரிக்கும்போது தாங்கள் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தபோது தங்கள் வீட்டிலிருந்து ஒரு இரு சக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் சென்றதை பார்த்ததாக தான் கூறியதாகவும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், போலிசார் வழக்கு சம்பவம் சம்மந்தமாக தங்கள் வீட்டிற்கு வந்து இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததற்காக தானும், சுகன்யா என்பவரும் அதில் கையெழுத்து செய்ததாகவும், பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ.2 என்றும், சம்பவ இடத்தில் உடைந்த பாட்டில் துகள்கள், எரிந்தநிலையில் உள்ள ஸ்கிரின் துணி, திரி ஆகியவைகளை கைப்பற்றியதற்காக போலிசார் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரிலும் தானும் சுகன்யாவும் கையெழுத்து செய்தோம் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.3 என்றும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஸ்கிரின் எங்கள் வீட்டில் போட்டிருந்த ஸ்கிரின் தான். தன்னிடம் காட்டப்படும் உடைந்த பாட்டில் மற்றும் திரியை தான் போலிசார் தன் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.2)** அ.சா.9.திரு.அருணகிரி, தனது சாட்சியத்தில், தான் திருச்சிராப்பள்ளி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்து 2024ம் வருடம் ஓய்வு பெற்றுவிட்டதாகவும், கடந்த 16.08.2021 தேதியில் புதுக்கோட்டை மாவட்ட காவல் அலுவலகத்தில் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்த போது திருக்கோகர்ண காவல் ஆய்வாளரிடம் இருந்து பெறப்பட்ட தொலைபேசி தகவலின்படி குற்ற எண். 648/2021 சம்மந்தப்பட்ட குற்ற நிகழ்விடம் பார்வையிடும் பணிக்காக கம்மாளர் தெரு, நேரு வீதியில் உள்ள சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், சம்பவ இடம் பார்வையிட்டபோது வீட்டில் கதவு நிலையில் தொங்கி கொண்டிருந்த ஸ்கிரீன் துணி எரிந்த நிலையில் காணப்பட்டிருந்தததாகவும், அதன் அருகில் உடைந்த நிலையில் ஒரு கண்ணாடி பாட்டிலும், திரியும் காணப்பட்டது என்றும், சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட மேற்படி தடய பொருட்களை மேல் பரிசோதனைக்காக சென்னை தடய அறிவியல் துறை வேதியியல் பிரிவுக்கு அனுப்பி எந்தவிதமான எரிபொருள் பயன்படுத்தப்பட்டது என்பதை அறியும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டடதாகவும், இந்த வழக்கு சம்மந்தமாக தன்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.3)** அ.சா.10.திரு.ரமேஷ், தனது சாட்சியத்தில், தான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் தாலுகா காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிசெய்து வருவதாகவும், 16.02.2021 தேதியில் திருக்கோகர்ண காவல் ஆய்வாளராக பணியில் புரிந்தபோது அன்றைய தினம் நிலைய அலுவலில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் முருகானந்தம் கம்மாளர் நேரு தெருவில் இருந்த முத்துக்குமார் என்பவர் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.648/2021 இதச பிரிவு 436ன் படி வழக்கு அச்சு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், அவர் பதிவு செய்த முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.7 என்றும்,

வழக்கின் மேல் விசாரணைக்காக தனது பார்வைக்கு வைத்தார் என்றும், அதை தான் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மலர்க்கொடி, சுகன்யா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்ததாகவும், தான் தயார் செய்த பார்வைமகஜர் அ.சா.ஆ.8 என்றும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.9 என்றும், அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் கிடந்த உடைந்த நிலையில் உள்ள திரியுடன் கூடிய பீர்பாட்டில் ஒன்று, எரிந்த நிலையில் ரோஸ் மற்றும் மெரூன் கலர் ஸ்கிரின் துணி ஒன்றையும் மகஜர்தயார் செய்து கைப்பற்றியதாகிவும், அந்த மகஜர் அ.சா.ஆ.10 என்றும், திரியுடன் கூடிய உடைந்த பீர்பாட்டில் சா.பொ.1 என்றும், எரிந்த நிலையில் உள்ள ரோஸ் மற்றும் மெரூன் கலர் ஸ்கிரின் துணி சா.பொ.2 என்றும், சாட்சிகள் முத்துக்குமார், வீரமுத்து, ஆனந்த், தர்மராஜ், மலர்க்கொடி, சுகன்யா மற்றும் தடயவியல் நிபுணர் திரு.அருணகிரி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், சாட்சிகள் விசாரணையில் குற்ற செயலில் ஈடுபட்டது விஜய் என்கிற கோழி விஜய், மணி என்கிற சின்னமணி மற்றும் கருப்பசாமி ஆகிய மூவரும் என்று தெரியவந்ததாகவும், எதிரிகளை தேடிவந்த நிலையில் 16.08.2021 தேதியில் 16.00 மணிக்கு எதிரி கோழிவிஜய் வீடுதாமரை கிரஷ்ஷர் அருகில் நிலைய குற்ற எண்.648/2021 வழக்கில் கைது செய்து சாட்சிகள் சின்னதம்பி, தயாளன் முன்னிலையில் எதிரி கோழிவிஜய் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை தானும் தனது நண்பர்களான மணி, கருப்பசாமி ஆகியோருடன் மணி என்பவர் இரு சக்கர வாகனமான TN 48 L6137 Hero Honda Splender வாகனத்தை ஓட்டியதாகவும் அதில் தான் முதலில் அமர்ந்ததாகவும், தனக்கு பின்னால் கருப்பசாமி அமர்ந்திருந்ததாகவும், வாதி வீட்டின் அருகே சென்றவுடன் கருப்பசாமி தன் கையில் வைத்திருந்த தனது வண்டியில் இருந்து பிடித்து நிரப்பிய பெட்ரோலுடன் கூடிய பீர்பாட்டிலில் திரியில் தீ வைத்து 1வது எதிரி விஜய் வாதி

வீட்டின் முன்பு எரிந்ததாகவும் கூறியதாகவும், எதிரி விஜய் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11 என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள இரு சக்கர வாகனம் மற்றும் திரி தயாரிக்க பயன்படுத்திய மீதமுள்ள துணியானது வேறு ஒரு வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளதால் அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், மேலும் 3வது எதிரி கருப்பசாமி என்பவரை 17.08.2021 தேதியில் மாலை 4.00 மணிக்கு நிலைய குற்ற எண்.651/2021 வழக்கில் பிரகதாம்பாள் கோவில் குளத்தின் அருகில் கைது செய்தபோது சாட்சிகள் சண்முகம், துரை ஆகியோர் முன்பு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், 19.08.2021 தேதியில் காலை 7.00 மணிக்கு புதுக்கோட்டை ரயில்வே ஸ்டேசன் அருகில் மணி என்கிற சின்னமணியை சாட்சிகள் சீனிவாசன், அருண் ஆகியோர் முன்னிலையில் கைது செய்ததாகவும், எதிரி மணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், மேற்கண்ட எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், கைப்பற்றிய தடயங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்ததாகவும், சாட்சிகள் தயாளன், சின்னதம்பி, சண்முகம், துரை, சீனிவாசன் , அருண், சிறப்பு உதவி ஆய்வாளர் முருகானந்தம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச பிரிவு 436ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**7)** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313–ன் படி எதிரிகளிடம் கேள்விகள் எழுப்பியதில் அவைகள் பொய் சாட்சியம் என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரிகள் தரப்பு சாட்சியம் இல்லை என்று

முடிக்கப்பட்டு, இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**8) இந்நிலையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்.**

இவ்வழக்கின் 3ம் எதிரி இறந்துபோய்விட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுபோனநிலையில் 1,2 எதிரிகளின் மீது இ.த.ச பிரிவுகள் 436ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**9) <u>தீர்வு.</u>**

15.08.2021 தேதியில் இந்த வழக்கின் புகார்தாரரும், அவரது குடும்பத்தாரும் அதிகாலை சுமார் 02.40 மணியளவில் வீட்டில் தூங்கி கொண்டிருந்தபோது அவர்களது வீட்டின் முன்பகுதியில் டமார் என்று பாட்டில் உடையும் சத்தம் கேட்டதாகவும், வெளியே வந்து பார்த்தபோது ஸ்பௌண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் அங்கிருந்து வேகமாக சென்றதாகவும், அந்த சமயம் புகார்தாரரின் வீட்டின் முன்புற கதவை இருந்த ஸ்கிரீன் துணி தீப்பிடித்து இருந்ததாகவும், அந்த இடத்தில் பாட்டில் சிதறிக்கிடந்ததாகவும், அந்த பாட்டிலில் துணியை கிழித்து திரியாக்கி அதில் பெட்ரோலை நிரப்பி புகார்தாரரின் வீட்டில் எரிந்து தீ வைக்க முயற்சித்துள்ளதாகவும், இது சம்பந்தமாக அ.சா.1 முத்துக்குமார் திருக்கோகர்ணம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி 16.08.2021 தேதியில் மாலை சுமார் 04.00 மணியளவில் இந்த வழக்கின் எதிரியான விஜய் என்பவரை பிடித்து விசாரணை செய்த போது அவர் வழக்கு சம்பவத்தை மற்ற இரு எதிரிகளுடன் சேர்ந்து செய்ததாக ஒப்புக்கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்து சம்பவத்தின்போது திரி செய்வதற்கு பயன்படுத்திய

துணி போக மீதி துணியை இதன் 1வது எதிரியிடமிருந்து கைப்பற்றியதாகவும், சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும், சான்று பொருட்களை கைப்பற்றியதிலிருந்தும் எதிரிகள் மீதான வழக்கு உண்மை என தெரிய வந்ததால் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 436ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் அரசுதரப்பு வழக்கு அமைந்துள்ளது.

**10)** இந்த வழக்கின் புகார்தாரரான அ.சா.1 முத்துக்குமார் என்பவர் தனது புகார் மனுவிலும், போலீஸ் விசாரணையின்போதும் 15.08.2021 தேதியில் அதிகாலை சுமார் 02.45 மணியளவில் அ.சா.1 அவரது குடும்பத்தாருடன் வீட்டில் தூங்கி கொண்டிருந்தபோது ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்கள் பிராந்தி பாட்டிலில் பெட்ரோலை நிரப்பி துணியை கிழித்து திரியாக்கி தீ வைத்து அவரது வீட்டில் எரிந்ததாகவும், அது குறித்து அக்கம் பக்கம் விசாரித்ததில் அ.சா.1 சாட்சியின் குடும்பத்தாரிடம் அடிக்கடி பிரச்சனை செய்யும் 2வது எதிரியும் அவருடைய நண்பர்களும் சேர்ந்துதான் அ.சா.1 வீட்டில் தீ வைத்ததாக தெரிய வந்ததாகவும் கூறிவிட்டு அ.சா.1 தன்னுடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது தமது வீட்டில் தீ வைத்த நபர்கள் யார் என்று தமக்கு தெரியாது என்றும், இந்த வழக்கின் எதிரிகள் தான் தீ வைத்ததாக போலீஸார் கூறியதன் பேரில்தான் தமக்கு தெரியும் என்றும், எதிரிகளுக்கும் தங்களுக்கும் எந்த முன்விரோதமும் இல்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 சாட்சியும் மேற்படி சாட்சியத்தை பரிசீலிக்கும்போதும் இந்த வழக்கின் எதிரிகள் தான் அ.சா.1 சாட்சியின் வீட்டில் தீ வைத்ததாக அறிந்துகொள்ள முடியவில்லை. அதற்குமேலும், எதிரிகளுக்கும் அ.சா.1 குடும்பத்தாருக்கும் இடையில் என்ன முன்விரோதம் இருந்தது என்றும் எதற்காக எதிரிகள் அ.சா.1ன் வீட்டிற்கு தீ வைத்தார்கள் என்பது குறித்தும் அறிந்துகொள்ள இயலவில்லை.

**11)** அ.சா.1ன் உறவுக்காரரான அ.சா.2 சாட்சி அவருடைய நீதிமன்ற சாட்சியத்தின்போது 15.08.2021 தேதியில் அதிகாலை சுமார் 02.45 மணியளவில் அவர்களுடைய வீட்டு கதவில் மாட்டப்பட்டிருந்த ஸ்கீரின் துணி மற்றும் ஆடு எரிந்து போனதாகவும், பாட்டிலில் பெட்ரோலை நிரப்பி அதை பற்ற வைத்து பெட்ரோல் குண்டாக மாற்றி எறிந்துள்ளதில்தான் அது போல் தீ பிடித்ததாகவும், ஆஜர் எதிரிகளை தமக்கு தெரியாது என்றும், சம்பவ இடத்தில் கிடந்த பாட்டில் துகள்களையும் எரிந்த நிலையில் இருந்த ஸ்கீரின் துணி மற்றும் திரி ஆகியவைகளை தனது முன்னிலையில் காவல் ஆய்வாளர் கைப்பற்றி மகஜர் தயாரித்ததாகவும், சாட்சியம் அளித்திருந்தபோதிலும் அ.சா.2 சாட்சி தம்முடைய குறுக்கு விசாரணையின்போது போலீஸார் சொன்னதின் பேரிலேயே மூன்று நபர்கள் இருசக்கர வாகனத்தில் சென்ற விபரம் தனக்கு தெரியும் என்றும், பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே தட்டச்சு செய்யப்பட்டு, போலீஸாரால் தயார் செய்யப்பட்டு கையோடு கொண்டு வந்திருந்த ஆவணத்தில்தான் அ.சா.2 கையெழுத்து செய்ததாகவும், நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் திரியானது தீயில் எரிந்த திரியாக இல்லை என்றும், ஆனால் போலீஸார் எரிந்த நிலையில் இருந்த திரியை தான் தன் முன்பாக கைப்பற்றினார்கள் என்றும், அரசுதரப்பு வழக்கிற்கு விரோதமாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 சாட்சியத்தின் மூலமாகவும் இந்த வழக்கின் எதிரிகள் தான் சம்பவ தேதியில் அ.சா.2 சாட்சியின் வீட்டில் பெட்ரோல் நிரப்பிய பாட்டிலை தீயிட்டு எறிந்ததாக அறிந்துகொள்ள முடியவில்லை.

**12)** வழக்கு சம்பவத்தை எதிரிகள் தான் மேற்கொண்டதாக நேரில் பார்த்த சாட்சிகள் எவரும் இல்லாத நிலையில் இந்த வழக்கின் 1வது எதிரியை 16.08.2021 தேதியில் அ.சா.10 காவல் ஆய்வாளர் கைது செய்து விசாரிக்கும்போது அவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்

அடிப்படையில்தான் இந்த வழக்கின் எதிரிகள் மேற்படி குற்றச்சம்பவத்தை மேற்கொண்டுள்ளதாக தெரியவந்ததுபோல் அரசுதரப்பு வழக்கு அமைந்திருந்தபோதிலும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.5 தயாளன் என்பவர் தம்முடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது இந்த வழக்கின் எதிரிகளை தமக்கு தெரியாது என்றும், வழக்கு பற்றியும் தமக்கு எதுவும் தெரியாது என்றும், அ.சா.5 சாட்சியின் முன்னிலையில் போலீஸார் பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸார் தம்மிடம் விசாரிக்கவில்லை என்றும், அரசுதரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திட்டுள்ள மற்றொரு சாட்சியான சின்னதம்பி என்பவர் அரசுதரப்பில் ஒரு சாட்சியாக விசாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான சூழ்நிலையில் அ.சா.5 சாட்சியத்தின் மூலம் இந்த வழக்கின் எதிரிகள் தான் வழக்கு சம்பவத்தை மேற்கொண்டதாக சிறிதும் அறிந்துகொள்ளமுடியவில்லை. அவ்வாறான சூழ்நிலையில் 1வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லும் துணியும் அவரிடம் இருந்து பெற்றதாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலமும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27ன்படி போதுமான அளவில் நிரூபிக்கப்படவில்லை என்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13)** வழக்கு சம்பவத்தில் இந்த எதிரிகள் தான் ஈடுபட்டதுபோல் அ.சா.3, அ.சா.6 முதல் அ.சா.8 சாட்சிகள் போலீஸ் விசாரணையின் போது வாக்குமூலம் அளித்திருந்தபோதிலும் மேற்படி சாட்சிகள் தங்களுடைய நீதிமன்ற முதல் விசாரணையில் சம்பவம் குறித்து அரசுதரப்பு வழக்கை ஆதரிக்காமல் எதிரிகள் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், சாட்சியம் அளித்துள்ளனர். அதனால், அரசுதரப்பு சாட்சிகளின் மூலம் வழக்கு சம்பவத்தை எதிரிகள் தான் மேற்கொண்டதாக அறிந்துகொள்ளமுடியவில்லை. அதற்குமேலும்,

பாதிக்கப்பட்ட நபர்களான அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் சம்பவத்தின்போது தங்களுடைய வீட்டில் ஸ்கீரின் துணி மற்றும் ஆடு ஒன்று எரிந்து போனதாக தங்களுடைய நீதிமன்ற முதல் விசாரணையில் சாட்சியம் அளித்திருந்தபோதிலும் அவ்வாறு எரிந்துபோனதாக சொல்லும் ஆடு குறித்து அரசுதரப்பில் எந்தவொரு விசாரணையும் மேற்கொண்டிருக்கவில்லை. அதுபோல், ஆடு ஒன்று எரிந்துபோனதாக அ.சா.1 சாட்சி அவர் கொடுத்த புகார் மனுவில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிட்டிருக்கவில்லை. அதனால், அ.சா.1ன் வீட்டில் எரிந்துபோன பொருட்கள் குறித்து அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதாகவே தெரியவருகிறது. இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட அ.சா.10 காவல் ஆய்வாளர் தம்முடைய நீதிமன்ற முதல் விசாரணையில் சம்பவ இடத்தில் கிடந்த உடைந்த நிலையிலுள்ள திரியுடன் கூடிய பீர் பாட்டில் ஒன்றை மகஜரில் கைப்பற்றியதாகவும், அந்த பீர் பாட்டில் சா.பொ.1 என்று குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 சாட்சி தம்முடைய புகார் மனுவில் சம்பவத்தின்போது பெட்ரோல் நிரப்பப்பட்ட பிராந்தி பாட்டில் கொண்டு எரிந்ததில்தான் தீ பிடித்ததாக குறிப்பிட்டுள்ளார். எதிரிகளால் கையாளாபட்டதாக சொல்லும் பொருட்கள் குறித்து பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 மற்றும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.10 சாட்சியங்களின் சாட்சிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையிலேயே அமைந்துள்ளது. அ.சா.10 காவல் ஆய்வாளர்கள் தன்னுடைய குறுக்கு விசாரணையின்போதும் சம்பவ இடத்தில் உடைந்த பீர் பாட்டில் கிடந்ததாக தடயவியல் நிபுணர் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான் என்றும், சாட்சியமளித்துள்ளதை பரிசீலிக்கும்போது சம்பவத்தின்போது அ.சா.10 சாட்சி எடுத்துரைத்திருப்பதுபோல் பீர் பாட்டிலில் பெட்ரோல் நிரப்பி தீ வைக்கப்பட்டிருக்குமா என்பது குறித்து சந்தேகமான சூழ்நிலையே எழுகிறது. மேற்படி காரணங்களின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக வழக்கு

குற்றச்சாட்டு அரசுதரப்பில் போதுமான அளவில் மெய்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் எதிரிகளை வழக்கு குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டியது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

14) ஆகவே இதன் முடிவில், இந்த வழக்கின் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச.பிரிவுகள் 436ன்கீழான குற்றச்சாட்டை பொறுத்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகிய சான்றுபொருட்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழித்துவிட உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 07ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K S PAULPANDIAN
Digitally signed by K S PAULPANDIAN
Date: 2026.03.07 20:07:48 +0530

தலைமை குற்றவியல் நீதிபதி,
புதுக்கோட்டை.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்.</u>**

| | |
|---|---|
| அ.சா.1. | திரு.முத்துக்குமார் |
| அ.சா.2. | திருமதி.மலர்கொடி |
| அ.சா.3. | திரு.தர்மராஜ் |
| அ.சா.4. | திருமதி.சுகன்யா |

| | |
|---|---|
| அ.சா.5. | திரு.தயாளன் |
| அ.சா.6. | திரு.ஆனந்த் |
| அ.சா.7. | திரு.அருண் |
| அ.சா.8. | திரு.சீனிவாசன் |
| அ.சா.9. | திரு.அருணகிரி |
| அ.சா.10. | திரு.ரமேஷ் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்.</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜரிலுள்ள முதல் கையெழுத்து (மலர்கொடி) |
| அ.சா.ஆ.3. | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் கையெழுத்து (மலர்கொடி) |
| அ.சா.ஆ.4. | பார்வை மகஜரிலுள்ள இரண்டாம் கையெழுத்து (சுகன்யா) |
| அ.சா.ஆ.5. | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாம் கையெழுத்து (சுகன்யா) |
| அ.சா.ஆ.6 | 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாம் கையெழுத்து (தயாளன்) |
| அ.சா.ஆ.7 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.9 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.10 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.11 | 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |

**<u>அரசு தரப்பு சான்றுபொருட்கள்.</u>**

| | |
|---|---|
| சா.பொ.1 | திரியுடன் கூடிய உடைந்த பீர்பாட்டில் |
| சா.பொ.2 | எரிந்த நிலையில் உள்ள ரோஸ் மற்றும் மெரூன் கலர் ஸ்கீரின் துணி |

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் :</u>**

**இல்லை.**

K S PAULPANDIAN

Digitally signed by K S PAULPANDIAN
Date: 2026.03.07 20:07:58 +0530

**தலைமை குற்றவியல் நீதிபதி,**
**புதுக்கோட்டை.**